1973 மார்ச் 28]

Assignment of lands in Payanur village

*543 *Q*.—Dr. H. V. HANDE : Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) whether it is a fact that pattas have been assigned to certain gazetted Police Officers working in Madras City in Payanur village, Chingleput district as landless individuals in October 1971; and

(*b*) if so, the details thereof and the basis on which such allotments were made?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

Dr. H. V. HANDE : May I know whether any gazetted Police Officer has applied for a plot and got it which was meant for landless people, either in 1970–71 or in any part of the last three years? If so, whether any action has been taken against that particular official? May I know the name of the official also?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவர் அவர்களே, இரண்டு மூன்று ஆண்டுகளுக்கு முன்பாக 1967 இல் இதுபோல போலீஸ்காரருக்கும், போலீஸ் அதிகாரிகளுக்கும் நிலம் கொடுக்கப்பட்டதாக அரசுக்குத் தகவல் வந்தது. நிலம் பெறுவதற்கு அவர்கள் தகுதி இல்லை என்று சொல்லி கொடுத்த நிலத்தை அரசாங்கம் ரத்து செய்துவிட்டது.

Drought affected area of Dharapuram

*544 *Q*.—Thiru A. R. MARIMUTHU : Will the Hon. the Minister for Revenue be pleased to state the improvements affected under the Special Rural Works Programme in the Chronic Drought areas included in the " Dharapuram Tract " viz. Sankari taluk, Tiruchengode taluk, Dharapuram taluk, Palani taluk and Udumalpet taluk?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: எப்போதுமே வறட்சியால் பாதிக்கப் படுகிற பகுதிகளுக்கான மத்திய அரசு பொறுப்பேற்கும் சிறப்பு, கிராமப் பணி கள் திட்டம், சங்கரி, திருச்செங்கோடு, தாராபுரம், பழனி, உடுமலைப்பேட்டை ஆகிய வட்டங்களைக் கொண்ட தாராபுரம் பகுதியில் செயற்படுத்தப் படவில்லை.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து: இம்மாதிரி நிரந்தரமான வறட்சி மிக்க பல பகுதிகளுக்கும் இந்தத் திட்டங்களை நிறைவேற்ற அரசு யோசிக்குமா?

[1973 மார்ச் 28

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : இது மத்திய அரசின் திட்டம். நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் அவர்கள் 2 மாவட்டங்களை எடுத்துக்கொண்டு இரண்டு, இரண்டு கோடி ரூபாய் ஆக 4 கோடி ரூபாய செலவிடக்கூடிய திட்டங்களை அனுமதித்தார்கள். ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ஒரு மாவட்டம் எடுத்துக் கொண்டால் போதும் என்பதாக அதற்கு 4 கோடிக்கு திட்டம் வகுக்க அனுமதி அளித்துள்ளார்கள்.

திரு. இ. எஸ். தியாகராசன் : திருத்தணி வட்டம் ஆந்திராவில் இருந்து வந்த காரணத்தினால் மிகவும் பிற்பட்டதாக இருப்பதால் அதனை இதோடு சேர்க்க முடியுமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : பிற்பட்ட பகுதி என்பதற்காக அல்ல, நிரந்தரமாக எப்போதும் வறட்சியால் பாதிக்கப்பட்ட நிலையில் உள்ள பகுதி என்கிற அளவில்தான் புள்ளிவிவரங்கள் சேகரிக்கப்பட்டு, அந்தப் பகுதி மக்களுக்கு ஊக்கம் அளிக்கிற வகையில் அமைக்கப்படுகிற திட்டங்கள் இவை.

திரு. வா. மை. அப்துல் ஜப்பார் : திருப்பூர் பகுதியோடு சேர்ந்தாற்போல உள்ள அரவக்குறிச்சி ஒன்றியம், பரமத்தி ஒன்றியம் வறட்சியால் மிகவும் பாதிக்கப்பட்டிருப்பதால் இந்த வறட்சிப் பகுதிகள் எல்லாவற்றையும் சேர்த்து ஒரு சிறப்புத் திட்டத்தை அமைத்து, மத்திய அரசு பணம் கொடுக்காவிட்டாலும் மாநில அரசே அதனை நிறைவேற்ற முன்வருமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : இது மத்திய அரசு பணம் கொடுக்க ஒப்புக் கொண்டிருக்கிற திட்டம், ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் தர்மபுரி மாவட்டத்தை மட்டும் எடுத்துக் கொள்ள ஒப்புக் கொண்டிருக்கிறார்கள். மற்ற பகுதிகளுக்கு இதனை விஸ்தரிக்க முடியாது. ஆயினும் நமது மாநிலத்தில் ஒவ்வொரு ஆண்டும் எந்தப் பகுதி வறட்சியால் பாதிக்கப்பட்டு விடுகிறதோ அங்கங்கே நமது மாநில அரசு தனித்தனித் திட்டங்களைப்போட்டு செயல் படுத்துகிறது.

புலவர் சி. பழனிச்சாமி : வறட்சியான பழனிப் பகுதிகளில் என்ன என்ன வறட்சி நிவாரணத் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டிருக்கின்றன ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : அது இந்தக் கேள்வியில் அடங்காது. இதில் இராமநாதபுரம், தர்மபுரி மாவட்டங்கள் தான் அடங்கியிருக்கின்றன.

THIRU K. S. KOTHANDARAMIAH : Sir, under Rural Works Programme, roads are laid in rural areas. But they are not metalled properly then and there. As such, when the metalling work is taken up, there will be no roads at all. May I know from the Hon. Minister whether the road forming and metalling will be done simultaneously?

1973 மார்ச் 28]

THE HON. THIRU P.U. SHANMUGAM: There is a High Power Committee to look after all these things. I hope they will look after them.

THIRU B. VENKATASWAMY: According to the statement given by the Hon. Minister for Revenue, it is stated that Dharmapuri is a chronically drought-affected area. May I know whether this Government will ask the Central Government to declare Dharmapuri District permanently as a drought affected area?

THE HON. THIRU P. U. SHANMUGAM: Dharmapuri is more or less a permanent drought affected area. Dharmapuri people are lucky enough to note that it has been included in the Fourth Plan. Ramanathapuram district is deleted. They are unlucky.

திரு. த. சோணையா: ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் தர்மபுரி மாவட்டத்தை மட்டும் எடுத்துக் கொள்ள மத்திய அரசு சம்மதித்திருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். மிகவும் வறட்சியாக இருக்கக் கூடிய இராமநாதபுரம் மாவட்டத்தையும் எடுத்துக்கொள்ள வேண்டும் என்று நமது அரசு வற்புறுத்துமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் இராமநாதபுரம், தர்மபுரி ஆகிய இரண்டு மாவட்டங்களையும் எடுத்துக் கொண்டிருந்தார்கள். ஐந்தாவது திட்டத்தில்தான் இராமநாதபுரத்தை நீக்கி விட்டார்கள். இராமநாதபுரத்தையும் எடுத்துக்கொள்ள வேண்டும் என்றுதான் அரசு சார்பில் சொன்னோம்.

Industrially backward areas

*545 *Q.*—THIRU B. VENKATASWAMY: Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) the areas in Tamil Nadu which are declared as backward areas; and

(*b*) the amount of financial assistance given by the Central Government for the backward areas during the period from 1967–1971?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: விவர அறிக்கை@ ஒன்று பேரவை முன் வைக்கப்பட்டுள்ளது.

@ 277–296-ம் பக்கங்களில் இணைப்பு II ஆக அச்சிடப் பெற்றுள்ளது.